**செய்தி வெளியீடு எண்: 660** **நாள்: 14.09.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளின் உணவூட்டுச் செலவினம் மற்றும் பராமரிப்புச் செலவினத்தை உயர்த்துதல்.**

*******

பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு நடத்தி வரும் அரசு சேவை இல்லங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. இச்சேவை இல்லங்களில் வசிப்பவர்களின் பெண் குழந்தைகள் 12ம் வகுப்பு வரையிலும், ஆண் குழந்தைகள் 5ஆம் வகுப்பு வரையிலும் சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயில்வதற்கும், பல்வேறு சூழ்நிலைகளில் பள்ளிப்படிப்பை இடை நிறுத்தம் செய்த பெண்கள் இவ்வில்லங்களில் குழந்தைகளுடன் தங்கி தங்கள் பள்ளிப் படிப்பை தொடர்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2018–2019ஆம் ஆண்டின் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கையின் போது அரசு சேவை இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவூட்டுச் செலவினம் உயர்த்தப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து, சமூக நலத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் 6 அரசு சேவை இல்லங்களில் உள்ள 475 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டு செலவினத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.450/–லிருந்து ரூ.900/– ஆகவும், ஆண்டொண்டிற்கு வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு செலவினம் ரூ.150/–லிருந்து ரூ.500/– ஆகவும் உயர்த்தி 2018–2019ஆம் ஆண்டு முதல் 56.50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**